37

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1949
MADRAS

# …புராணத் தோத்திரமும் சிவத்திரு. சேக்கிழார் விழாவும்”

…மத் சிவஞான பாலய சுவாமிகள்
மடாலயம்
மயிலம்

Q23 wxl,
N49

113071

38/59
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1949
MADRAS

உ
முருகன் துணை

# "சிவபுராணத் தோத்திரமும்
# ★ சிவத்திரு. சேக்கிழார் வரலாறும்"

இந்நூல்
திருக்கயிலாய பரம்பரைப் பொம்மையபாளையம் பெரியமடம்
திருமயிலம் தேவத்தான ஆதீன பரம்பரைத் தர்மகர்த்தத்துவம்
பதினெட்டாம் பட்டம்

**ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்**

**சிதம்பரம் சேக்கிழார் திருவருட் கழகத்தின்**
**மூன்றாவது ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கியதின்**
**நினைவுக் குறியாகச்**
**சந்நிதானத்தின் திருவுள்ளப் பாங்கின்படி**
வெளியிடப்பெற்றது.

ஆக்கியோன்,
**வித்துவான் - வே. சிவசுப்பிரமணியன்**
ஆசிரியர் - தமிழ்க் கல்லூரி
மயிலம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1949
MADRAS

முருகன் துணை

# முகவுரை

மனித வாழ்வு மாண்புற வேண்டுமானால்—உள்ளத்தில் உவகை பூக்கவேண்டுமானால்— கனிந்த சிந்தையில் கருணை பூக்கவேண்டுமானால் அதற்கு அமைதி இன்றியமையாதுவேண்டும். அவ்வமைதியை எங்கு பெறலாம். "அவனன்றி ஓரணுவும் அசையாதன்றோ" அவ்வகை ஆற்றல் மிக்கவனை—தோற்றமும் ஒடுக்கமும் செய்யும் தூயவனை—மாற்றறியாத செழும் பசும் பொன்னை எண்ணுவார் எண்ணும் நிலையில் வந்தருள் செய்யும் ஏற்றமுடையவனை அடைதற்கு வழி தேடினால் அனைத்தும் அழகுற எய்தலாகும்.

அவ்வகை ஆற்றலை அமர்ந்த இடத்திலேயே அனைவர்க்கும் அளிப்பது வழிபாடாகும். வழிபாடு மாசு மறுவற்ற மலர்களால் இயற்றப்படுவதாகும். அம்மலர்கள் சாதாரண மலர்களாய் இருப்பின் சிறிது நேரத்தில் செம்மை குன்றிவிடும். எனவே பாமலர்களாய் இருப்பது பலரும் மெச்சுவதாம். இந்நிலையால் இன்றும் என்றும் பரமனைப் பாடியடையலாம் என்று கருதியே அறிஞர்பலர் அவ்வக் காலங்களில் அகத்தில் தோன்றும் அனுபவங்களையும் புறத்தில் கண்ட காட்சிகளையும் கலந்து பல வழிபாட்டு மலர்களை நமக்கருளினர்.

ஆகவே, இத்தோத்திரங்கள் மக்கள் வாழ்வை மாண்புறச் செய்வதோடு ஆண்டவன் அருள்பெற ஆம் வழியென்றறிந்த அடிகளார் இச்சிறு தோத்திரப் பகுதியைத் தொகுக்கக் கட்டளையிட்டனர்.

மற்றும் இலக்கியச் சிற்பிகள் எண்ணற்றவருள்ளும் அடியவர் நிலையிலே—அனுபவ நிலையிலே—திடமுறும் செயலிலே—தெளிவு நிறைந்த சிந்தையிலே தோய்ந்த சேக்கிழார் அமைத்த கலைக்கோயில்

வாழ்வைத் திருத்தி—வன்மையை ஊட்டி, ஊழ்வினை போக்கி, உறு துணை ஆக்கும் தன்மை வாய்ந்ததாகும். இத்தகைய மாபெரும் சைவநூல் ஒன்று சாற்றிய தொண்டர்தம் வரலாறு உணர்ந்து கொள்ள அனைவருமே ஆசைகொள்வர். ஆகவே, அவர் வரலாற்றையும் சேர்த்து இச்சிறு நூலை வெளியிட எங்கள் சுவாமிகள் அருள் பாவித்தனர்.

இதில் முதற்காணும் தோத்திரங்கள் நாள்தோறும் பாராயணம் செய்தற்கேற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளன.


இதுவே எனது முதல்நூல் ஆதலின் எண்ணற்ற பிழைகள் இருப்பதும் இயல்பே. அறிஞர் அவற்றைப் போக்கி அடியேனை ஊக்கி நல்லவற்றைச் சுவாமிகளின் அருட் பெருக்கால் அமைந்தவை யெனக்கொண்டு என்னை ஆதரிக்கவேண்டுகின்றேன்.

இந்நூல் ஆக்கும் காலத்து உடனிருந்து ஏடெழுதியும் பிழை திருத்தியும் உதவிய எனது நண்பர் திரு. வித்துவான் - க. நாகேஸ்வரன் அவர்களுக்கு என் நன்றியும் அன்பும் உரித்தாகுக.

இங்ஙனம்
**வே. சிவசுப்பிரமணியன்**
ஆசிரியர், தமிழ்க்கல்லூரி
மயிலம்

மயிலம்
31—5—'49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1949
MADRAS



ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்

18-வது பட்டம்.

உ

சிவமயம்.

## விநாயகர் துதி

அகரமென அறிவாகி உலக மெங்கும்
        அமர்ந்தகர உகரமக ரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
        பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
        போற்றுநருக் கருட்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரில் மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
        நிருமலனைக் கணபதியை நினைத்து வாழ்வாம்.

(விநாயக புராணம்)

## *வல்லபை விநாயகர் துதி

கோலமா மணிமன் றுள்ளே குனித்திடும் அருள்சேர் அண்ணல்
மூலமாய் இலங்கு கின்ற முதன்மைசேர் தில்லை தன்னுள்
பாலய தேவர் போற்றப் பரவுவார் இடரைத் தீர்க்கும்
சீலவல் **லபைக ணேசன்** சேவடி சிந்தை செய்வாம்.

அன்புசேர் மனத்துத் தொண்டர்க் ககப்படும் ஈசன் அன்பர்
வன்புசேர் இருளைப் போக்க வழங்குவெண் ணீற்றுக் கையர்
பண்புசேர் பாலயர் தாம் பரவுவல் **லபைக ணேசன்**
நன்புசேர் அடிகள் நந்தம் மனத்திடை நினைத்து வாழ்வாம்.

உள்ளங் களித்தெந்தை வார்சடைக் கானத்
        துலாவித் துளைக்கை நீட்டி
உயர்கற்ப கத்தழை முறித்துக் கவுட்சாரல்
        ஊதுவண் டோச்சி வேணி
வெள்ளந் திளைத்துப் படிந்தாடி வல்லபையின்
        வியன்முலைக் கோடுழக்கும்
விகடகட தடகும்ப நடனகுஞ் சிதசரண
        வேழத்தை அஞ்சலிப்பாம்

---

*இப்பாடல் இயற்றியவர் உயர்திரு. வித்துவான்-க. நாகேஸ்வரன் அவர்கள்.

பள்ளம் புகும்புன லெனக்குற மடக்கொடிப்
பைந்தொடிப் பேதை நனியில்
பாயாத வேங்கையாய் நீழல்செய் தவள்கனிப்
பவளவாய் ஊறல் பருக
கள்ளங் கொளுங்கிழக் கோலமேற் கொண்டுநீ
காட்டுகென வேட்டு நிற்கும்
கந்தனைச் சந்தனச் சோலைசூழ் மயிலக்
கடம்பனைக் காக்க வென்றே.
(மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்)

## பரசிவ வணக்கம்

தணந்தபெருந் துயர்க்கடல்மீக் கூர்தலினல் மலைபயந்த தாள மூரல்
கணங்குழையாள் புரிபூசை முடிவளவும் தரியாமல் இடையே கம்பை
அணங்கினைத்து தெனவிடுத்து வலிந்திறுகத் தழீஇக் கொள்ள
[அமையாக்காதல்
மணந்தருளிக் குறிபூண்ட வொருமாவிற் பெருமானை வணக்கம்
[செய்வாம்.
[காஞ்சிப் புராணம்]

## உமையம்மை துதி

சீரணி சிருக்கு மணிவடம் சங்கு திரிசூலப்படை இலைவேல்
போரணி பாசம் அங்குசங் கழைவில் பூங்கணை வேறுவேறணியா
வாரணன் மாய னரனிப முகத்தன் அனங்கனென்றிவர் தொழிற்
[கெல்லாம்
காரணமாதல் தெளித்தருள் கொழிக்கும் கன்னியை யுன்னியேத்
[தெடுப்பாம்.
[திருத்தணிகைப் புராணம்]

## நடராஜர் துதி

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.
[பெரியபுராணம்]

## சிவகாமியம்மை துதி

மன்றில்மணி விளக்கெனலாம் மருவுமுக நகைபோற்றி
ஒன்றியமங் கலநாணின் ஒளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ அருள்சுரக்கும் சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி.

[கோயிற்புராணம்]

## தக்ஷிணாமூர்த்தி துதி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத்

[தொடக்கைவெல்வாம்

[திருவிளையாடற் புராணம்]

பதிபசு பாசமென்னப் படுமொரு மூன்றுஞ் சுத்தம்
பதிநிலை யொன்றற் கொன்று பயில்வியாப் பியமாமின்னும்
பதியொடு பசுக்க லக்கும் பண்புமிற் றென்றோர் செங்கைப்
பதிவிர லளவிற் சேர்ப்பிற் பகர்பவற் கடிமைசெய்வாம்.

[திருநாகைக் காரோணப் புராணம்]

## வைரவக்கடவுள் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

[கந்தபுராணம்]

## வீரபத்திரக்கடவுள் துதி

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமகம் ஒடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

[கந்தபுராணம்]

## சுப்பிரமணியர் துதி

ஓங்கொளியாய் விசும்பாதி தொறுமியலும்
தனதியல்பை உருவின் மாட்டும்
பாங்குபெறத் தெரித்ததுபோல் பலபொறியாப்
பரமர்விழி பயந்த ஞான்று
தேங்கொளியாய் வெளியடர்ந்து வளிதொடர்ந்தொள்
ளொளிபடர்ந்து தெளிநீர்ப் புக்கு
நீங்கிவிளை யாட்டயர்ந்து தணிகையமர்
பெருவாழ்வை நினைத்து வாழ்வாம்.

[திருத்தணிகைப் புராணம்]

### (செங்கீரைப் பருவம்)

பால்மாரி பெய்துடல் வழிந்தென்ன நீற்றொளி
பழுத்தசெம் மேனி யெம்மான்
பங்கேருகக் கரம் கூப்பிநின் றேத்தலும்
பரிவுவைத் தன்ன வர்க்கும்
வான்மாரி பொய்ப்பினும் பொய்யாத காவேரி
மாநதி கொணர்ந்து தந்த
மலயமா தவனுக்கும் அவனிவட் டத்தடரும்
வன்கலிக் கோடை தணியத்
தான்மாரி பெய்தன்ன நிதிமாரி பெய்யுமிரு
தாமரைச் செங்கை யாளி
தயவாளி சிவஞான தேசிகர்க்கும் பழஞ்
சதுர்மறைப் பொருள் விரித்துத்
தேன்மாரி பெய்தெனன உரைத்தகுரு தேசிகா
செங்கீரை யாடிய ருளே
தென்மயிலை தழையவரு சேனுப தித்தலைவ
செங்கீரை யாடிய ருளே.

### (அம்புலிப் பருவம்)

முன்னவன் கடலைபொரி அவல்முதிரை எள்ளுண்டை
முக்கனிக் குவை சர்க்கரை
முக்கிய மகோதரன் பூதரம் பொருவேழ
முகவன்விக் கினமெ வைக்கும்

அன்னவன் உன்னைவெஞ் சாபமிட்டது தன்னை
மசற்றுதற் கின்னமுந் தான்
மாட்டாது புவியெலாங் கண்புதைப்பக் ககன
வட்டத் தலைந்து திரிவாய்
இன்னவன் பின்னவன் என்பதுந் தெரிவைநீ
இருமூன்று வதன மெய்தும்
எங்கள்குல மதலைக்கு நின்மீது கோபம்வரின்
எவரே தடுக்க வல்லார்?
அன்னவவை செய்வதிவ னுக்கருமை யன்றுகாண்
அம்புலீ யாட வாவே!
அணிபெற்ற மயிலைவரு முருகசர வணபவனே
டம்புலீ யாட வாவே!!

(சிறுதேர்ப் பருவம்)

தொக்கிட் டெதிர்ந்தமர் தொடங்கிநிரு பன்முதற்
சூர்வெங் காம னுதி
தொல்லைப் பழம் பகையை இதயரண களமதில்
சூலையிட் டாட விட்டு
நெக்கிட்ட விழமுட்டி வெட்டிவெட் டிச்சங்க
நிரை நிரை முழக்க அஞ்ஞன்
நேராது முதுகிட்டு நின்றிடப் புருகுடி
நெறிப்பினல் வாகை கொண்டு
புக்கிட்ட முப்புவன வட்டத்தி னுங்கருணை
பொழி செயத் தம்ப நாட்டிப்
போதகன் **சிவஞான தேசிகன்** மும்மதம்
பொழியும்வே ழங்கள் கட்டும்
திக்கெட்டு ஞானசக் கரமொன் றுருட்டி நீ
சிறுதேர் உருட்டி யருளே
தென்மயில மலைவாழ வந்தகரு ணைகரா!
சிறுதேர் உருட்டி யருளே.

(மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்)

## தெய்வயானை வள்ளியம்மை துதி

இறைகதித்த சூர்முதலை யிறுப்பவரா னேயினையோ ஞன வாற்ருன்
முறைகதித்த விருசுடரே முகத்துவிழி யெனத் தெரிக்கு முறையை
[யேய்ப்ப
நறைகதித்த மலர்க்கழுநீர் நளினமவன் விழியருகு நலக்கவேந்தி
நிறைகதித்த வுளத்தொடிடம் வலமமர்ந்த மாதர்பத நினைத்தல்
[யெய்வாம்.

(திருத்தணிகைப்புராணம்)

## திரு நந்திதேவர் துதி

ஐயிரு புராணநூ லமலர்க் கோதியும்
செய்யபன் மறைகளும் தெரிந்து மாயயான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம். (கந்தபுராணம்)

## திருஞானசம்பந்தர் துதி

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் தண்டை
வெறித்தண் கமலமே வீடு. (நால்வர் நான்மணிமாலை)

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோன் அழுதுமையாள் கருதியூட்டும்
எழிசையின் அமுதுண்டு தாளம்வாங்கி
இலங்கியநித்திலச் சிவிகையிசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்தரேய்ந்து
வளர்கிழி பெற்றரவின்விடம் மருகல்தீர்த்து
வீழிநகர்க் கரசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன் மேனியில் வெப்பு விடுவித்தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் எற்றி
ஆற்றிலிடும் ஏடெதிர்போ யணைய வேற்றி
ஓரமண ரொழியாமே கழுவி லேற்றி
ஓதுதிருப் பதிகத்தால் ஓட மேற்றிக்

காருதவும் இடிபுத்தன் தலையி லேற்றிக்
காயாத பனையின் முதுகனிக ளேற்றி
ஈரமிலா அங்கமுயி ரெய்த வேற்றி
இலங்கு பெரு மணத்தரனை யெய்தினரே.
[திருஞானசம்பந்தர் தேவாரம். முன்னுரை]

## திருநாவுக்கரசர் துதி

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத தென்கொல்வெள் [ளேறுடையான்
தனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்த! வித்தாரணியில்
நினக்கன்பு செய்கின்ற வப்பூதியைச்சிவ நேசமுறு
மினர்க்கன்பு செய்நம்பி யாரூரனேத்து மியல்பறிந்தே.
[நால்வர் நா. மாலை]

போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப்
பொருவில் கொருக் கையரதிபர் புகழனார்பால்
மாற்றருமன் பினில்திலக வதியா மாது
வந்துதித்த பின்பு மருள் நீக்கியாரும்
தோற்றியமண் சமயமுறு துயரநீங்கத்
துணைவரருள் தரவந்த சூலை நோயால்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்தில்
பாழி யொழித்தரனதிகைப் பதியில் வந்தார்

வந்துதமக் கையரருளால் நீறு சாத்தி
வண்தமிழால் நோய்தீர்ந்து வாக்கின்மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலம் கொடிஇடபம் விளங்கச் சாத்தி
அந்தமில்அப் பூதிமகன் அரவு மாற்றி
அருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கி
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தினரே.
[திருநாவுக்கரசர் தேவாரம். முன்னுரை]

## சுந்தரர் துதி

வாங்குசிலை புரையுமுட லெனுங் குளத்தில் மூல
மலமெனுமோர் வெங்கராவின் பகுவாயி னின்றும்
நீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற் கூற்றுவனல்
ஓங்குநா தாந்தமெனப் பெயரியவக் கரையி
லுமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்
கோங்கமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே.

(நால்வர் நான்மணிமாலை)

## வாதவூரர் துதி

கடல்நிற வண்ணன் கண்ணெனன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பருதி கொடுத்த சுருதி நாயகற்கு
முடிவிளக் கெரித்தும் கடிமலர்க் கோதைச்
சுரிகுழல் கருங்கண் துணைவியை அளித்தும்
அருமகள் நறும்பூங் கருமயிர் உதவியும்
நெல்முளை வாரி இன்னமு தருத்தியும்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படும் அணிமீன் அரற்கென விடுத்தும்
பூட்டி யரிவாள் ஊட்டி யறிந்தும்
தலைஉடை யொலிக்கும் சிலையிடை மோதியும்
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்தும்
தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றும்
குற்றம் செய்த சுற்றம் களைந்தும்
பூக்கொளும் மாதர் மூக்கினை யரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநாள் ஒருசிலர் தொண்டராயினர்
செங்கண்மால் தடக்கையிற் சங்கம் நாண
முள்தாள் தாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப!
பாடும் பணிநீ கூடும் பொருட்டு

மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்
இருக்கும் அடுக்கல் அரக்கன் எடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமகள் தழுவ மனம் மகிழ்வோனே.

[நால்வர் நான்மணி மாலை]

## திருமால் துதி

அஞ்சிறைவன் டினங்குழுமி யலம்பமுகை
யுடைந்துமட லவிழ்ந்த செம்பொற்
கஞ்சமக ளினிதுறையு மணிமார்பும்
வனமாலை கமழ்திண் டோளும்
பஞ்சவிதப் படைக்கரமும் அணிமுடியும்
பார்முழுதும் அளந்த பைம்பொற்
செஞ்சரண விணைமலரும் நினைந்தாதி
கேசவனைத் தியானஞ் செய்வாம்.

## பிரமதேவர் - கலைமகள் துதி

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி
பெறமுக்கண் மூர்த்தி தாளில்
தொழுதகன்ற அன்பெனுநார் தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்புந் தேனும்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தாள்
அடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

[திருவிளையாடற் புராணம்]

## காரைக்காலம்மையார் துதி

கிடந்து கண்களிற் கேட்கு மவன்புக
லடைந்த கைகொ டுயிர்ப்பவ னத்தன்வாழ்
வடந்த யங்கு வனத்திற் றலையினு
னடந்த வம்மை பதமலர் நண்ணுவாம்.

[திருக்கூவப் புராணம்]

## சண்டேசுரர் துதி

கொலைகடிந் தொழுகுவோரே குழகனை யடைவா ரென்று
மலையில்வே தாகமத்தின் வழக்குமா ருகத் தந்தை
கொலைபுரிந் துண்டலாதி கொடுத்திட வேற்றுச் செம்பொன்
மலைவிநா யகன்பால் சார்ந்த மழவுதாள் சார்ந்து வாழ்வாம்.
(தனியூர்ப்புராணம்)

## திருத்தொண்டர் வணக்கம்

நகைய மைந்தவன் றொண்டர் நவில்தொண்டத்
தொகைய மைந்த தொகையடி யார்களும்
தகைய மைந்த தனியடி யார்களும்
வகைய மைந்தவென் னுள்ளத்து வாழ்வரே.
(திருக்குறுக்கைப் புராணம்)

## சிவஞான பாலய சுவாமிகள் துதி

அருந்து மமுதி னினியகா
யன்போ டளைந்து படிறில்தா
யறைந்த மொழிகத் துவமசியி
னன்றி மாறு வியல்பினதாய்ப்
பொருந்து மறையா முடம்பிற்குப்
புக்க வுயிராய்ப் பவக்கடற்குப்
புணையாய்க் கயிலை வழித்துணையாய்
பொலிந்த திருவஞ் செழுத்தென்னும்
பரந்த புகழ்மந் திரவேந்து
பவனி போதுந் திருமருகாய்ப்
பனிவெண் டிங்கட் சடை முடியோன்
படிவ முணர்த்தும் விளக்காகித்
திருந்து பவளத் திருவாயால்
செல்வா முத்தந் தருகவே
திளைக்குங் கருணைச் சிவஞான
தேவா முத்தந் தருகவே.
(சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ்)

## சிவம்பிரகாச சுவாமிகள் துதி

எவர்க்குமெய்ஞ் ஞானசோதி யீயுமா ணிக்கமாகி
யுவப்பொடு வெறுப்புமாகி யுற்றிடு விடயத் தெய்தும்
பவப்பெரும் புணரி நீந்தப் பாரதி யாகு **மெங்கள்**
**சிவப்பிரகாச தேவன்** திருவடி சென்னி சேர்ப்பாம்.

(நல்லூர்ப் புராணம்)

## சேக்கிழார் துதி

தூக்குசீர்த் திருத்தொண்டத் தொகைவிரி
வாக்கினுற் சொல்ல வல்லபிரா னெங்கள்
பாக்கியப்பய ஞப்பதி குன்றைவாழ்
**சேக்கிழானடி** சென்னி இருத்துவாம். (காஞ்சிப்புராணம்)

## தமிழ்த் தெய்வ வணக்கம்

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை அனைத்தும்வென் றாரியத்தோ
டுறழ்தரு **தமிழ்த் தெய்வத்தை** உள்ளினை தேத்தல் செய்வாம்.

(சீகாளத்திப் புராணம்)

## வாழ்த்து

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

(திருஞானசம்பந்தர் தேவாரம்)

உ

திருச்சிற்றம்பலம்

# திருமுறைத் திரட்டு

## முதல் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

திருப்பிரமபுரம்—பண்—நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண்மதி சூடி
காடுடையசுட லைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

அருநெறிய மறை வல்ல முனியகன் பொய்கையலர் மேய
பெருநெறிய பிர மாபுர மேவிய பெம்மானிவன் றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர் ஞான சம்பந்தன்உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல்எளி தாமே.

திருச்சிற்றம்பலம்

## இரண்டாம் திருமுறை

திருவலஞ்சுழி—பண்—நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

திருச்சிற்றம்பலம்

## மூன்றும் திருமுறை

திரு ஆலவாய்—பண்—கொல்லி

திருச்சிற்றம்பலம்

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெரும் தேவிகேள் !
பால்நல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீபரி வெய்திடல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே.

திருச்சிற்றம்பலம்

திருக் கழுமலம்—பண்—பழம்பஞ்சுரம்

திருவியமகம்

திருச்சிற்றம்பலம்

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள்
[மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே அமரர்கள் செய்வதும்
[உன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தை உகந்தனையே.

திருச்சிற்றம்பலம்

## நான்காம் திருமுறை

### திருநாவுக்கரசு சுவாமிகள்

திருவதிகை வீரட்டானம்

பண்—கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும் பிரியாது வணங்குவன்—எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்துறை
[அம்மானே

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங்காநட மாடவல்லாய்
ஆர்த்தா னரக்கன்தனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனையான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் திகைக்கெடில
வீரட்டானத் துறை யம்மானே.

திருச்சிற்றம்பலம்

## ஐந்தாந் திருமுறை

### கோயில்—திருக் குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

திருச்சிற்றம்பலம்

### திருவின்னம்பர்—திருக் குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க் கணக் கின்னம்ப ரீசனே.

திருச்சிற்றம்பலம்

## ஆறும் திருமுறை

திருக்கன்ருப்பூர்—திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து போற்றி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண் டாட்டாதொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காணலாமே.

திருச்சிற்றம்பலம்

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS No. 113071

## ஏழாம் திருமுறை

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருவாரூர்

பண்—தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பொன்னுமெய்ப் பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னைஎன் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்னதன் மையனென் றறியொணு
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி
ஆரூரானை மறக்கலு மாமே.

திருச்சிற்றம்பலம்

# எட்டாம் திருமுறை

## மாணிக்கவாசகர்

திருவாசகம் திருச்சதகம்

திருச்சிற்றம்பலம்

மையிலங்குநற் கண்ணி பங்கனே
வந்தெனைப்பணிக் கொண்டபின் மழக்
கையிலங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருதுகின்றிலேன்
மெய்யிலங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை யன்பருள் மெய்ம்மைமேவினார்
பொய்யிலங்கெனைப் புகதவிட்டு நீ
போவதோ சொலாய் பொருத்தமாவதே.

திருச்சிற்றம்பலம்

## திருக்கோவையார்

(இயற்கைப் புணர்ச்சி—காட்சி)

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்கு தெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி யனநடை வாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர் கின்றதே.

திருச்சிற்றம்பலம்

# ஒன்பதாம் திருமுறை

## 1. திருமாளிகைத் தேவர்

### திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கோயில்—உயர் கொடியாடை

உயர்கொடி யாடை மிடைபடலத்தி
ளுமைதூமப் படலத்தின்
பெயர்நெடு மாடத் தகிற்புகைப் படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிகள் நிரந்துசேர் கனக
நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயர்வரு மமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகளென் மனத்துவைத் தருளே

திருச்சிற்றம்பலம்

## 2. சேந்தனுர்

### திருப்பல்லாண்டு

பண்—பஞ்சமம்

மன்னுகதில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல் லாம்
[விளங்க
வன்னநடை மடவாளுமை கோனடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

திருச்சிற்றம்பலம்

## பத்தாம் திருமுறை

திருமூலர்—திருமந்திரம்

அன்புடைமை

அன்புஞ் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

திருச்சிற்றம்பலம்

# பதினோராந் திருமுறை

## 1. காரைக்கால் அம்மையார்—திருவிரட்டை மணிமாலை

திருச்சிற்றம்பலம்

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்சமென்பாய்
தளர்ந்திங் கிருத்தல் தவிர்த்தி கண்டாய் தளராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்திடை வளர்கோட்டு வெள்ளை
இளந்திங்களும் எருக்கும் இருக்கும் சென்னிஈ சனுக்கே.

திருச்சிற்றம்பலம்

## 2. சேரமான்பெருமாள் நாயனார்

### பொன் வண்ணத் தந்தாதி

பொன்வண்ண மெவ்வண்ணம்
அவ்வண்ணம்மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ண மெவ்வண்ணம்
அவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ண மெவ்வண்ணம்
அவ்வண்ணம் மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ண மெவ்வண்ணம்
அவ்வண்ணம் ஆகிய ஈசனுக்கே.

திருச்சிற்றம்பலம்

# பன்னிரண்டாம் திருமுறை

## பெரிய புராணம்

திருச்சிற்றம்பலம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம் பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். 1

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில். 2

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை
தேனக்க மலர்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள். 3

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலின்வீழ் மாக்கள் எறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் எற்றிடல் உரைக்க வேண்டுமோ. 4

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்கவென்றார். 5

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்
அன்புசெறி கடலுமாமெனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான்பெற்ற
புண்ணியக் கண்ணிரண்டெனவும் புவனமுய்ய
இருட்கடுவுண் டவரருளும் உலகம்எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவும்கூடித்
தெருட்கலை ஞானக்கன்றும் அரசுஞ்சென்று
செஞ்சடை வானவர்கோயில் சேர்ந்தாரன்றே.

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள வளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும் திருந்துசாத் துவிகமேயாக
இந்துவாழ் சடையா னாடு மானந்த வெல்லையில் தனிப்பெருங்
[கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின்
மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

திருமுறைத் திரட்டு முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

# சிவஞானபோதம் மூலம்

## மெய்கண்டதேவ சிவாசாரியர்

சிறிய வாடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்
கறிவு நூல்களின் முடிவெலா மகப்படுத் தவற்றின்
நெறியெ லாம்விளக் கியசிவ ஞானபோ தத்தைக்
குறிசெய் தீந்தமி ழாலுரை குரவனைப் பணிவாம்.

[விநாயக புராணம்

## அருணந்தி சிவாசாரியர்

புன்னெறி யகற்றிய போத சூத்திரத்
தின்னெறி விளங்கநூல் இலங்கச் செய்துமேல்
நன்னெறி காட்டருள் நந்தி தேசிகன்
தன்னிரு பங்கய சரணம் போற்றுவாம்.

[சிவபுண்ணியத் தெளிவு

## மறைஞான சம்பந்த சிவாசாரியர்

பார்திகழ வளர்சாம வேத மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்வுதா வந்தருளி எம்மை யாண்ட
சைவசி காமணி மருதத் தலைவ னந்தண்
கார்மருவி பொழில்புடைசூழ் மதில்மீதே மதியம்
கடவாமை நெடுங் கொடியின் காந்தகையுங் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்த னெந்தை
திருவளரு மலரடிகள் சென்னி வைப்பாம்.

(சிவப்பிரகாசம்)

## 21

## உமாபதி சிவாசாரியர்

சொற்றரு முதல்வழித் தொன்மை நூன்முறை
கற்றொருளிர் சிவப்பிர காச நூல்புகல்
கொற்றவன் குடிவரு குரவன் எம்மையாள்
நற்றவன்பதம் அகம் நாட்டுமரோ.
(சிவபுண்ணியத்தெளிவு)

## I. திருக்குத் திருசிய விவேக இயல்

1. அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கி மலத் துளதாம்
அந்த மாதி யென்மனார் புலவர்.

2. அவையே தானே யாயிரு வினையின்
போக்கு வரவு புரிய வாணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே.

3. உளதில தென்றலி னெனதுட லென்றலின்
ஐம்புல னொடுக்க மறிதலிற் கண்படில்
உண்டிவினை இன்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா.

4. அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவைத் தைத்தே.

5. விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்விற் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

6. உணருரு வசத்தெனி னுணரா தின்மையின்
இருதிற லல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே.

## II. சாதன சாத்திய விவேக இயல்

7. யாவையும் சூனியம் சத்தெதி ராகலின்
சத்தே யறியா தசத்தில தறியாது
இருதிறண் அறிவுளது இரண்டலா வான்மா.

8. ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.

9. ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழ லாம்பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே.

10. அவனே தானே யாகிய வந்நெறி
ஏக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

11. காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா வன்பி னரன்கழல் செலுமே.

12. செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

சிவஞானபோதம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# சிவத்திரு
# சேக்கிழார் வரலாறு

உ
சிவமயம்.

# சேக்கிழார் வரலாறு

## விநாயகர் காப்பு

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

## சபாநாதர்

சீராரும் சதுமறையும் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராரும் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி.

## சிவகாமசுந்தரி

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

## கற்பக விநாயகர்

மலரயனுந் திருமாலும் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக்கோ புரவாயில்
நிலவியகற் பகக்கன்றின் நிரைமலர்த்தா ளிணைபோற்றி.

## சுப்பிரமணியர்

பாறுமுக மும்பொருந்தப் பருந்துவிருந் துணக்கழுகு
நூறுமுக மாயணைந்து நூழில்படு களம்புகுத
மாறுமுகந் தருநிருதர் மடியவடி வேலெடுத்த
ஆறுமுகன் திருவடித்தா மரையிணைக ளவைபோற்றி.

### சைவ சமயாசாரியர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

### சேக்கிழார்

குன்றைநகர் தனிலுதித்துக் குலோத்துங்கன்
மகிழதிருத் தில்லைவந்து
மன்றவர்தாம் அடியெடுக்க மகிழ்ந்துலக
மெல்லாமென் றுரைதுவக்கி
நன்றுபுரி அடியர்திறம் நவின்றுலகில்
அழியாத பேறுபெற்ற
தொன்றுதொடு சைவநெறித் தோன்றல்
அருண்மொழித் தேவர்த்துதித்து வாழ்வாம்.

---

# சேக்கிழார் வரலாறு

## தோற்றுவாய்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் பிறநாடுகள் நாகரீகமடைவதற்கு முன்பே நாகரீகத்தில் வளர்ச்சியுற்றிருந்தது. நாட்டு வளப்பத்தில் தலை சிறந்தது. மொழியாராய்ச்சியாளர்களால் உலகமொழிகள் அனைத்தும் பிறத்தற்கு முதற்காரணம் என்று இக்காலத்துக் கருதபபடுகின்ற, **உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழி** எனும் பெருமொழியைத் தன்னகத்துடையது.

> "சைவத்தின்மேற் சமயம் வேறில்லை அதில்சார்சிவமாம்
> தெய்வத்தின் மேல் தெய்வம் வேறில்லை"

என்று ஆன்றோர்களால் புகழப்படாநின்ற, உலகமனைத்துக்கும் ஒத்ததாகிய, முன்பொருகாலத்து உலகமனைத்தும் பரவியிருந்தது என்று கூறப்படுகின்ற, சிவம் எனும் செம்பொருள் கொண்டிலங்குகின்ற சைவ சமயம் விரிந்து பரந்து நிறைந்து நிற்றற் குரியதாயுள்ளது.

இத்தகைய தமிழ்நாடுதான் பிறநாடுகள் போலன்றித் தான் பெற்ற மொழியையும் சமயத்தையும் அன்றுபோல் இன்றுவரைப் போற்றி வருகின்றது. இத்தமிழ்நாடு சங்ககாலத்துச் சேர, சோழ, பாண்டிய நாடு என்ற முப்பிரிவினையுடையதாயிருந்தது. கி.பி.400 முதல் தொண்டைநாடு என்ற புதுப்பிரிவினையும் தன்னகத் துடைய தாயிற்று. இங்ஙனம் பிரிதற்குமுன் இத்தொண்டைநாடு சோழ நாட்டினுள் அடங்கிக் கிடந்தது. சோழர்களால் ஆளப்பட்டது. பிரிந்த பின்னர்ப் பல்லவர்களால் ஆளப்பட்டது. இங்ஙனம் தோன்றிய பல்லவர் தொண்டை நாட்டுடன் சோழ நாட்டையும் இணைத்து ஆண்டனர். இப் பல்லவர் ஆட்சி ஒழிந்த பின்னர் சோழ நாடும் தொண்டை நாடும் சோழர்களால் ஆளப்பட்டன. வரலாற்றில் இடம்பெற்ற **இத் தொண்டைநாடே அருண்மொழித் தேவர் எனும் மூவாத் தமிழ்மணியாய சிவத்திரு. சேக்கிழார் தோன்றுதற்குரிய நாடாக இருந்தது.**

## நாட்டின் சிறப்பு

இந்நாடு செங்கற்பட்டு, சித்தூர், வட ஆர்க்காடு முதலிய மாவட்டங்களையும், தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒருபகுதியையும் தன்னகத்துக் கொண்டது. "தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து" என்று ஆன்றோர்களால் பாராட்டப்பட்டது. கல்விக்கு உறைவிடமாயது. இந்நாட்டின் தலைநகரம் பெருஞ் சிறப்புற்ற காஞ்சிமாநகரமாகும். இக்காஞ்சி நகரத்தில் கடிகை எனப்படும் வடமொழிக் கல்லூரிகளும், தமிழ்மொழிக் கல்லூரிகளும் நிறைந்திருந்தன வென்பதைப் பல்லவர் காலத்துக் கல்வெட்டுக்களால் அறியலாம். தென்மொழியும் வடமொழியும் தெளிவுறக் கற்ற சிவஞான யோகிகளும், அவர்தம் மாணவராய கச்சியப்ப முனிவர் [illegible]ளும், உறைதற்கும், தோன்றுதற்கும் முதவிடமாயிருந்ததெனின் அதன் சிறப்பினைக் கூறவும் வேண்டுமோ. பிற்காலத்துப் பூண்டி அரங்கநாதக் கவிராயரும் இதுபற்றியே "கற்றுத் தேர்ந்தவர் வாழ்திருக் கச்சிமாநகர்" என்றார். எவ்வாற்றானும் சான்றோர் உடைமைபற்றியே தொண்டை நாட்டிற்குச் சிறப்புக் கூறப்படுதல் காண்க. இத்தொண்டை நாட்டில் ஓடும் பேராறு செங்கற்பட்டை அண்மியுள்ள பாலாறாகும். இத் தொண்டைநாடு பிறநாடுகளைப்போலன்றி நானிலங்களையும் கலந்துடையதாயுள்ளது. திருத்தணிகை, திருமயிலம், திருவேங்கடம், திருக்காளத்தி முதலாய மலைகளையும், இடையிடை விளைவு இல்லாத பாலை நிலங்களையும், சிறு காடுகளையும், பசும்பட்டைப் பரப்பினால் ஒத்த பயிர் பொதிநிலங்களையும், மல்லை (மஹாபலிபுரம்) போன்ற கடற்றுறை முகங்களையும் தன்னுள்ளே உடையதாயிருத்தலின்

நானிலத்து ஐந்திணை வளங்களையும் காண்போர் தன்னுள்ளே பெறும்படியாகச் செய்கின்ற தெனலாம். இத் தொண்டைநாட்டில் தொண்டர் தம் தோன்றல் தோன்றியவிடம் யாதெனக் காண்பாம்.

## தவம் பெறு தனியூர்

தொண்டைநாடு பண்டைநாள் இருபத்து நான்கு கோட்டங்களைத் தன்னகத் துடையதாயிருந்தது. அக் கோட்டங்களுள் ஒன்று **புலியூர்க் கோட்டம்.** இப்புலியூர் சென்னைக் கடுத்த கோடம்பாக்கம் புகைவண்டி நிலையத்திருந்து அரைக்கல் தொலைவில் உள்ளது. இக் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டில் *குன்றத்தூரில் அருண்மொழித் தேவர் தோன்றினர்.

## வேளாளர் சிறப்பு

கரிகாற் சோழன் தொண்டை நாட்டை வளப்படுத்தி அங்கு நாற்பத் தெண்ணாயிரம் வேளாண் குடிகளைக் குடிபுகச் செய்தனன். அக் குடிகளுள் கூடல் கிழான், புரிசை கிழான், வெண்குளப்பாக் கிழான், சேக்கிழான் என்னும் வேளாளர் குடிகள் சிறப்புற்றவை. உமையம்மை காஞ்சி நகரின்கண் சிவபெருமானை வழிபட்டுப் பெற்ற இருநாழி நெல்லினைத் தமது புதல்வராய வேளாளர் கையிற் கொடுப்ப, அவர்கள் அதை வித்தாகக் கொண்டு பயிர்செய்து உலகில் உள்ளோர் அனைவர்க்கும் உணவளித்துத் தமது புகழைத் தலைமுறை வழியில் நிறுவினர். இதுபற்றியே

"இருநாழி நெற்கொண்டு ...
ஓங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டுமொல்
ஏங்கொலிநீர்க் காஞ்சியிடை" என்று உமாதேவியைக் கூறுவர்.

நிலப்பரப்பு வயலாகவும், கடல் ஏரியாகவும், இயமனிடத்தும் சிவனிடத்தும் உள்ள மாடுகள் உழவு மாடாகவும், ஆண்டுதோறும் விதையை அளந்து தப்பாமற் கொடுப்பவள் கச்சி நகரில் வீற்றிருந்தருளும் அறம் வளர்த்த அம்மையாகவும் இருக்கப்பெற்று வேளாளர் நடத்தும் உழவின் செழுமையால் எறும்பு முதல் தேவர்வரையுள்ள அனைத்துயிர்களும் உணவுபெற்று மகிழும்.

"உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கு நிலை" என்றாரன்றே வள்ளுவர்.

---

*குன்றத்தூர் பல்லாவரம் புகைவண்டி நிலையத்திருந்து இருகல் தொலைவில் உள்ளது.

வேளாளர் உழுது வயலில் தங்கள் கையினால் நட்ட நாற்றுமுடி திருத்தமாயிருக்குமானால் இவ்வுலகத்திலேயாளும் அரசர்தம் முடி திருந்தும். அவர்கள் ஏரடிக்கும் தாற்றுக்கோலால் நிலத்திலே ஆட்சிசெய்ய, அரசர் செங்கோல் செலுத்துவர். அவ்வேளாளர் தாம் இல்லையேல் அரசர்க்கு வெற்றியும் நிலைபெறாதாம்.

"பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"

என்று புறநானூறு கூறும்.

இன்னும் வேளாளர் சிறப்பினை அறிவுறுத்தும் பழங்கதை ஒன்றும் கூறுவாம். அந்தணன் ஒருவன் நீலி என்ற தன் மனையாளுடன் கூடி இல்லறம் நடத்திய காலத்துப் பரத்தைபால் அன்புடையனாய் அவளைச் சார்ந்து கைப்பொருள் இழந்து வறியன் ஆயினன். ஒருநாள் தன் மனைவியை அவள்பெற்ற குழந்தையோடும் அவள் தாய்வீட்டினின்று அழைத்துவரும் வழியில் அவளது நகைகளைப் பரத்தைக்குக் கொடுப்பக் கருதி வெளிப்படக் கேட்பின் அவள் உடன்படாள் என்பதை மனதில் எண்ணி இடைவழியகத்தொரு பாழ்ங்கிணற்றில் அவளை மகவொடும் வீழ்த்திவிட்டு அணிகளைக் கைக்கொண்டு பரத்தைபாற் சேர்ந்தனன்.

அவன் மறுபிறப்பில் வணிகனாய்ப் பிறந்து பெரும்பொருள் படைத்து வாணிகம்பேணி வளமுடையனாய் ஒழுகும்நாளில் விருந்தினராய்ப் பெரியவர் ஒருவர் அவன்பாற் சார்ந்தார், அவர் அவனால் வழிபாடுற்றுப் பிரியுங்காலை "ஐயா! நீ வடக்கே செல்லாதே, எனெனின் முற்பழி யொன்றுனக்குளது, எத்திறத்தும் உன்னைப் பழி விடாது. ஆயினும் நீ இம்மந்திரவாளைக் கையில் வைத்திருக்கும்போது அப்பழி நின்னை வருத்தாது". என்று சொல்லி அவ்வாளைக் கொடுத்துப் போயினர்.

சிலநாள் சென்றபின் அவ்வணிகன் வணிகம் ஏதுவாகப் பழையனூர்க்குச் சென்றபோது முற்பழிவாங்கச் சமயம் பார்த்து ஆங்கிருந்த பார்ப்பனப் பெண்ணாகிய நீலி, குழந்தையுடைய பெண்ணைப் போன்ற வடிவம்பூண்டு அவ்வூர் நீதிமன்றத்தாராகிய வேளாளர் எழுபதின்மருடைய அவைக்களம் புகுந்து 'பெரியோர்களே! இவ்வணிகன் என் கணவன், இப்பிள்ளை அவனுக்கு என்னிடம் பிறந்தது. இவன் நெடுநாளாக என்னை நீங்கிப் பரத்தைபாற்பட்டான். ஆதலின் இவனோடெம்மைச் சேர்ப்பீராக' என்று குறையிரந்தனள். அவர்கள் இதுகேட்டு வணிகனை வினவியபோது அவன் "இவள் என் மனைவியல்லள் இக்குழந்தையும் எனக்கு இவளிடம் பிறந்ததல்ல. இவள் பெண்வடிவெடுத்த பேய். என்னைக் கொல்ல

இங்ஙனம் வந்தனள்'' என்றனன். அதைக்கேட்டு அவையினர் ஐயுற்றபோது அந்நீலி அவன் குலமுறையாவுங் கூறி அழுதனள். அக்குழந்தையைத் தகப்பனிடம் செல் என்றனள். குழந்தையும் வணிகன்பாற் சென்றது. அதுகண்டு அவையோர் இரக்கமுற்று வணிகனை வலிந்து உடன்படுத்தி அவனுயிர்க்குத் தம்முயிரினைப் பிணை என்று உறுதிகூறி அவளோடவனை ஓர் இடத்து ஓர் அறையுள் தங்கவைத்தனர். அவன்பால் மந்திரவாள் இருப்பதைக்கண்டு அஞ்சிய நீலி அவையோர்க்குத் தெரிவிக்க அவர்கள் அதனையும் கைப்பற்றிக்கொண்டனர். பின்னர் அவையோர் அனைவரும் தம் மனைக்கேகியபின் அவள் அன்றிரவு அவ்வணிகன் உடலை இரு கூறுக்கி உயிரை எடுத்துக்கொண்டு சென்றனள். மறுநாள் வேளாளர் எழுபதின்மரும் ஆங்குச்சென்று அறையைத் திறந்துபார்த்த காலத்து வணிகன் இறந்துகிடப்பதைக்கண்டு அச்சுற்றுத் தாம் கூறிய சொற்பிழையாமைப்பொருட்டு செந்தீவளர்த்து அதனுள் எழுபதின்மரும் முழுகி ஆலங்காட்டடிகள் திருவடிநீழலை அடைந்து அழியாப் பேறுபெற்றனர். அத்தகைய கூறிய சொற் பிழையாத வேளாளரின் பெருமை எம்மனோரால் இயம்பற் பாற்றன்று.

நம்பி யாரூரரால் சொல்லப்பட்ட அறுபது நாயன்மார்களில் பதின்மூவர் வேளாளர் ஆவர். எனின் வேளாளர் குடிச் சிறப்பினைக் கூறலும் வேண்டுமோ?

## சேக்கிழார் தோற்றம்

இங்ஙனம் வாய்மையும் சொல் தவறுமையும் தூய்மையும் உடையராகிச் சிறப்புற்ற வேளாண் குடியிலே சேக்கிழார் குடியானது சிறப்புற, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க அரசும் குடிகளும் அறவழிப் படர தண்டமிழ் மக்கள் தொண்டர்சீர் பரவ நன்ஞெளான்றில் அருண்மொழித் தேவர் தோன்றினர். அவர் பின் பாலறுவாயர் வந்து தோன்றினர். இங்ஙனம் தோன்றிய இருவரும் பிறைமதியின் வளர்ச்சிபோல் நாடொறும் வளர்ந்து பைந்தமிழும் வடமொழியும் பிறகலையும் தெளிவுறக் கற்று அறிவும், ஆண்மையும் பெருமையும் உடையரா யிலகினர். இஃதிவ்வாறுக.

## அமைச்சுரிமை பூணல்

நீர்நாடெனப்படும் சோழ நன்னாட்டை *இரண்டாங் குலோத்துங்கன் என்னும் சோழ மன்னன் ஆண்டுகொண்டிருந்தான்.

*குறிப்பு :—சோழர் மரபு வழிப்படம்.

விஜயாலயன

ஆதித்தன் 871—907 கி. பி.

பராந்தகன் I 907—953

- கண்டராதித்தன் 950—57
  - மதுராந்தகன் 973—985
- இராஜாதித்தன்
- அரிஞ்சயன் 956—57
  - பராந்தகன் II 956—973
    - ஆதித்த கரிகாலன்
    - இராசராசன் 985–1014 (திருமுறைகண்டவன்)
      - இராசேந்திரன் I
        - இராசாதிராசன் 1018—54
        - இராசேந்திரன் II 1052—64
        - வீரராசேந்திரன் 1064—69
          - அதிராசேந்திரன் 1070
        - அம்மங்கை — இராஜராஜ நரேந்திரன்
      - குந்தவை — விமலாதித்தன் (சாளுக்கியர்)
        - இராஜராஜ நரேந்திரன்

அம்மங்கை — இராஜராஜ நரேந்திரன்

முதற்குலோத்துங்கன் 1070—1120

விக்கிரமசோழன் 1120—1135

இரண்டாம் குலோத்துங்கன் 1133—1150

அன்னன் திருப்பணிகள் பல செய்தும் பற்பல கோயில்களைப் புதுக்குவித்தும், தில்லைச்சிற்றம்பலம் திருச்சுற்றுமாளிகை அம்மன் கோயில் முதலியவற்றைப் பொன்வேய்ந்தும் சிவநேய மிக்கவனாய் ஒழுகினன். இவனது வேறு பெயர் அநபாயன் என்பது. இத்தகைய சிவப்பெருஞ் செல்வனை குலோத்துங்கன் குன்றத்தூர்ச் சேக்கிழாரின் குறைவற நிறைந்த கல்விப் பெருமையினையும் குண நலத்தினையும் கேள்வியுற்று இவரே தமக்குத் தகுதியான அமைச்சரெனத் துணிந்து அவரை யழைத்துத் தனது செங்கோலை ஏற்று நடத்தும் தலைமைப் பதவியாகிய அமைச்சுப் பணியினை அவர்க்குக் கொடுத்து தனது பேராகிய உத்தம சோழபல்லவன் என்னும் உயர்ந்த பட்டத்தினையும் அளித்தான்.

சேக்கிழார் மக்கட்குப் பணி செய்தலே தனது கடப்பாடென எண்ணி "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற எண்ணம் உடையராய் குறைநீக்கி முறைபுரிந்து குடிவளம் படுத்து வாழ்ந்தனர். அமைச்சர்தம் திறமையும் அரசனதன்பும் ஒருங்குகூடி நாட்டையாண்டமையின் அவர் தம் ஆட்சிக் காலத்துப் போர்கள் பெயரளவிலும் இலவாயின. அமைதியும் சமயவுணர்ச்சிக்கான திருப்பணிகளுமே யாண்டும் நிலவி இருந்தன.

## நாகேஸ்வரத்தை நாடி ஒழுகுதல்

அரவணியணிந்தோனும் பிறைமதிக் கண்ணியனும் அடியவர் அன்பனும் ஆகிய இறைவன் உவந்துறையும் சோழவளநாட்டுத் திருநாகேஸ்வரம் என்னும் பதியில் சேக்கிழார் அன்பு சென்று நிறைவதாயிற்று. எனவே அரசியல் அலுவல் பல நிகழ்த்தும் போதும் அக உணர்ச்சியில் திருநாகேஸ்வரத்தை மறவாத அன்புடையராய் இருந்து வந்தனர். இங்ஙனம் தோன்றிய அன்பு முறுகி வளரத் தாம் தோன்றிய பதியாகிய குன்றத்தூரில் அழகும் அமைதியும் கெழுமிய முறையில் கோயில் ஒன்றெடுப்பித்து அதற்கும் திருநாகேஸ்வரம் எனப் பெயரிட்டு மண்டபம் முதலியனவும் அமைப்பித்துப் பூசை நடத்தற்குவேண்டிய நிமந்தங்களையும் ஏற்படுத்தித் திருவிழாக்கள் முதலியனவும் பொலிவுற நடத்தற்குவேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். இஃதிங்ஙனமாக

## தமிழ் நாட்டில் சமணம்

தமிழ் நாட்டில் வேரூன்றியிருந்த பண்டைச் சமயங்கள் சைவமும் வைணவமுமே என்பதைச் சங்க நூல்களாலறியலாம். சிவன்,

திருமால், பலதேவன், முருகன் என்னும் நால்வருமே பழந்தமிழ் மக்களால் கடவுளராகக் கொள்ளப்பெற்றனர் என்பதை

"ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்.
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தியொண் செய்யோனும் என
ஞாலங் காக்கும் கால முன்பின்
தோலா நல்லிசை நால்வர்"— எனும் புறநானூற்றுப்

பாடற்பகுதியால் அறியலாம்.

இங்ஙனம் தமிழொடு சைவம் தழைத்தினிதோங்கிய செந்தமிழ் நாட்டில் சங்க காலத்தையடுத்த நான்கு ஐந்தாம் (4, 5) நூற்றுண்டுகளில் சமணரும், பௌத்தரும் வந்து புகுந்து தம் சமயததைப் பரப்பினர். இவ்வாறுகப் பரவிய சமணமும், பௌத்தமும் சைவமன்றிப் பிறசமயம் அறியாச் செந்தமிழ் மக்கள் உள்ளத்திற் புகுந்து அறிவை அழித்து, ஆற்றலைக் கெடுத்து, கலையை மாய்த்து, கவினைப் போக்கி, அன்பை அகற்றி, அமைதியைப் போக்கி அவர்க்குக் கேடு விளைப்பனவாயின. கட்டுக்கதையென்பது ஒன்றறியாச் செந்தமிழ் மக்களைத் தம் சமய வயப்படுத்தற்கு அமணர் கையாண்ட முறைகளில் ஒன்று, கதையின் மூலம் காவியம் அமைத்துத் தம் சமயக் கருத்தைப் பரப்புதல் ஆகும். இவ்வாறு சைவத்தின் நீங்கிப் புதிதாய் வந்த சமணத்தில் மக்கள் புகுந்து வருந்துதல் கண்ட ஞானசம்பந்தர், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் செய்த அழைப்பின்பேரில் மதுரை சென்றனர்.

ஆண்டிருந்த அமணர்கள் நெடுமாறனுக்குவந்த சுரத்தை நீக்க வந்த ஞானசம்பந்தர்க்கு வலப்பாகத்தைக்கொடுத்து இடப்பாகத்தைத் தமக்கெனப் பெற்றனர். ஞானசம்பந்தர் வலப்பாகத்துச் சுரத்தை "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீறு பூசி நீக்கினர்.

ஞானசம்பந்தரால் நீக்கப்பட்ட வலப்பாகத்துச் சுரம் இடப்பாகத்துச் சென்று ஆண்டுச் சுரத்தை மிகுவித்தது. இடப்பாகத்துச் சுரம் நீங்காது வருந்திய நெடுமாறன் அமணரை நோக்கி உங்கள்

சமயம் பொய்; நீர் சுரம்நீக்க வல்லரல்லீர் என்று கூறி ஞானசம்பந்தரைத் தனது இடப்பாகத்துச் சுரத்தையும் போக்கியருளுமாறு வேண்டினன். அங்ஙனமே ஞானசம்பந்தரும் இடப்பாகத்துச் சுரத்தை அவனது கூனொடு நீக்கினர். பின்னர் அமணர்கள் அனல்வாதம், புனல்வாதம் முதலியவற்றால் வாதிட்டுப் பார்ப்போம். அவற்றிலும் யாங்கள் வெல்ல வில்லையேல் கழுவேறுவோமென்றனர். அவர்கள் மேலும் வற்புறுத்திக் கூறியபடியால் ஞானசம்பந்தர் அனல்வாதம், புனல்வாதம் முதலியவற்றிலும் வென்றார். அது கண்ட அமணர் தம் சமயம் இனிப் பலியாது என்று பயந்து கழுவேறினர். நெடுமாற பாண்டியனும் சமணத்தின் நீங்கிச் சைவம் சார்ந்தனன். நாடு நலம்பெற்றது; மக்கள் மகிழ்ந்தனர். இச்செய்தி தமிழ்நாடறிந்ததொன்றாகும்.

அச்சமண சமயம் அரனடியன்றிப் பிறாடியறியாப் பெருங்குடும்பத்தில் உதித்தவரும், சிவத்தொண்டே தனது உயர்கடன் எனக்கொண்ட திலகவதியாரின் உடன் பிறந்தவரும், அரனது பத்திச் செல்வத்தைத் தனக்கே உரிமை எனப் பூண்டவரும் ஆகிய அடிகள் நாவுக்கரசரையும் ஊழ்வினை வயத்தாற் சிறிதுகாலம் தன்பால் ஈர்த்ததொன்றன்றோ? அது காரணமாகவே அடியார் பலர் ஆண்டாண்டுத்தோன்றி சைவத்தின் பெருமையை உலகிற்குணர்த்தி சமணத்தை அழித்தனர்.

இங்ஙனம் இடைக்காலத்துச் சமணம் அழிந்தது. அழிந்த சமணர் ஆய்ந்தனர் பன்னாள். தமிழ்நாட்டுமக்கள் தங்கள் மொழியை உயிரைக்காட்டிலும் உயர்ந்ததாக வாழ்வின் வளமருள் வற்றாத ஊற்றாக, அன்பை அளித்து ஆக்கமூட்டும் இன்பப் பொருளாக, நாகரிகம் அளித்து நன்னிலையாக்கும் நந்தா விளக்காக, ஆற்றலையளித்து அமைதியைக் காக்கும் அரும்பெரும் நிதியாகப் போற்றுபவர் அன்றோ? எனவே தமிழிற் சிறந்த இலக்கண இலக்கியங்களை இயற்றி அவற்றின்வழியே தம் சமயத்தைப் பரப்ப எண்ணினர். நம் அரசனுடைய இரண்டாங் குலோத்துங்கன் காலம் அதற்குத் தோற்றுவாய் ஆகும். முளைத்தெழுந்த சமணம் கலையைக் கொலையாக்கிய சமணம் — வாழ்வின் வளமையைக் கெடுத்த சமணம் — அறிவை அடிமையாக்கிய சமணம் அக்காலத்து உருப்பெற்றதென்னலாம். இவன் காலத்துக்குச் சிறிது பின்னர் நன்னூல் பவணந்தி முனிவர் என்னும் சமணரால் இயற்றப்பட்டது. அதற்குமுன்னர் இவன் காலத்தில் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவரால் "சீவக சிந்தாமணி" என்னும் பெருங்காவியம் ஒன்று இயற்றப் பெற்றது.

## சீவகன் கதையிற் காவலன் பற்று

இங்ஙனம் தோன்றிய சீவக சிந்தாமணியைச் சிலர் மெய்யென நினைத்துக் கற்று, நெற்குத்தி யுண்ணுமல் பயனற்ற உமியினைப் பலகாலும் கை வருந்தக் குத்திப் பயனெய்தார்போலவும் கன்றீன்ற பசு அண்மையில் நிற்க அதை நீக்கி மலடாகிப்போன பசுவைக் கறந்து மனம் சோர்வார்போலவும் இருபாலும் மணம் வீசுகின்ற மலர்களையுடைய சோலைகளையுடையதும், உண்ணுதற்குரிய நீர்க் கேணிகளையுடையதும், சென்று நேர் சேர்வதும், ஆகிய நல்வழி யிருக்கக் குழிகளில் விழுந்து உடல்வருந்த சேற்றிற் பாய்ந்து உடை யழுக்கேற ஊண் சுருங்கிக் கெடுவார்போலவும் வருந்தினர். சோழ னும் ஊழ்வினைப்பயனுல் உலகமுய்ய வந்துதித்த வள்ளல் அருண் மொழித்தேவர் வாக்கினுல் பெரிய புராணம் எனுங்காலை இளங்கதிர் தோன்றித் தனது கதிர்களை ஒருங்கு பரப்பவேண்டியிருத்தலினுல் அவர்கள் பொய்யாகக் கட்டி நடத்திய அச் சிந்தாமணியை மன முவந்து பலவாருகப் புகழ்ந்துரைத்துக் கேட்பானுயினன். "அர சன் எவ்வழி அவ்வழிக் குடிகள்" ஆதலின், அரசன் சீவக சிந்தா மணியை விரும்பிக் கேட்டலின், சீவக சிந்தாமணியை மக்களும் பயின்று சைவம் மறந்து சமணம் அடைந்து, உய்வகை இன்றி, உழன்று திரிந்து, மெய்மைகுன்றி, மேன்மைகெட்டு அழிந்தொழி வர் என்பதை அருண்மொழித்தேவர் உன்னினுர். கவிநயம்மிக்க காவியமாயினும் ஆக்கியோர் கருத்து தமது சமயத்தைப் பரப்புதல் ஒன்றேயாதலின் அக்கருத்து முற்றத்தொடங்கின் மக்களுக்கும் மன்னனுக்கும் உண்டாகும் கேட்டினை மக்களையும் மன்னனையும் மதி கொண்டு வழிப்படுத்தும் மந்திரத்தொழில்பூண்ட சேக்கிழார் எண்ணினுர்.

## தொண்டர் சீர்பரவத் தோற்றுவாய் செய்தல்

அருண் மொழித் தேவர் அரசனை அண்மினர். பின்னர்க் கூறுவார். அரசே! இது சமணர்கள் தம் சமயத்தைப் பரப்புதற்கு மேற்கொண்ட ஓர் நூல்.

இந்நூல் சைவ நெறியில் பயின்ற நூல்கள்போல எளிதில் இருமைப் பயனையும் ஈவதொன்றன்று. இம்மையிலும் மறுமை யிலும் பயன் தரத்தக்க தொன்று உண்டு என்ருர்.

அமைச்சர் சொற்கேட்ட அரசன் "நீவிர் கூறிய இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி தரத்தக்க கதை தான் யாது" என்று கேட்டான்.

அமைச்சர் அருண் மொழித் தேவர் "ஐந்தொழில் இயற்றும் அரன் அடியார்பால் அன்புசெய் ஆற்றலைத் தோற்றும் அறிவு சேர் கதைகள் இம்மையும் மறுமையும் தர வல்லவை" என்றார்.

அதுகேட்ட சோழன்—உயிர்க்கு உறுதி செய்யாது அழிவுதரும் கதையாய்—பயனற்ற கதையாய்—இச்சிந்தாமணி இருப்பின், நீவிர் இருமைக்கும் உறுதி தரவல்லது எனக் கூறும் அச்சிவகதைதான் எது? அச்சிவகதையைப் பகுத்துணர்ந்த பெரியோர் தாம் யாவர்? அச்சிவ கதைதான் இச்சீவக சிந்தாமணியைப்போல் இடையே ஒரு சிலரால் ஆக்கப்பட்டு வந்த கற்பனை கலந்த கட்டுரைக் கதையோ? அல்லது பழங்கதையோ? அதைப்பற்றிச் சொல்லுகின்ற உண்மை நூற்கள் உண்டோ? இவ்வுலகத்து அக்கதையைச் சொன்னவர் தாம் யார்? கேட்டோர் யார்? தவத்தின் சிறப்பமைந்த கதையோ? அல்லது அடியார் பலர் குருலிங்க சங்கமம் என்ற முந்நிலையால் தவம் செய்து இறைவன் திருவடிப்பேறு பெற்றதைப்பற்றிக் கூறும் ஒப்பற்ற சிவ கதையோ? இக்கேள்விகட்கெல்லாம் முறையுறப் பதில் கூறுவீராக என்றான்.

இங்ஙனம் சோழர்குலம் தூய்மையுறவந்த குலோத்துங்கன் தான் சொல்லிய மொழிகளைச் செவிக்கொண்டு மகிழ்ந்து அதன் மேல் வினாக்களைக் கேட்ட அளவிலே தொண்டர்க்கெளியனாய்த் தொண்டுபுரி அம்பலவன் தொண்டராய சேக்கிழார்.

"திருவாரூர் இறைவனாய எம்மையாளுடைய ஈசன் திருத்தொண்டர் பெருமையினைப் பாடுதற்காகத் "தில்லைவாழ் அந்தணர்" என்று முதலடி எடுத்துக்கொடுக்கத் தம்பிரான் தோழரும் தமிழ் வளம் படுத்துத் தம்பிரானைப் பரவைபால் தூதுகொண்டோரும் ஆகிய நாவலூர் நம்பி [சுந்தரர்] பதினொரு பாடல்களாகத் திருத்தொண்டத் தொகையென்னும் நூலைச் செய்தனர்.

அந்நூலே முன்னூலாக, அந்நூற்குத் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் பொருள்பகர அப்பிள்ளையாரின் அருள்பெற்றுய்ந்த நம்பியாண்டார் நம்பி என்னும் சைவ வேதிய மாதவர் "திருத்தொண்டர் திருவந்தாதி" என்னும் வழிநூல் செய்தார். அத்திருத்தொண்டர் திருவந்தாதியை—நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு திருமுறைகளைத் தொகுத்தவனும் சிவபத்திப் பெருஞ் செல்வத்தில் திளைத்தவனும், தஞ்சை இராசராசேச்சுரம் என்னும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை எடுப்பித்தவனும் ஆய இராசராச சோழனும்—சிவாலய தேவர் முதலாய மாதவரும், ஏனைய உலகத்துள்ள பெரியோர்களும் வியந்தினிது புகழ்ந்தனர். என்று கூறி முடித்தனர்.

அதுகேட்ட சோழன் அக்கதையை முறைபடக் கூறுவீராக வென்று கேட்க அருண்மொழித்தேவர் தில்லைவாழ் அந்தணர் முதலாக இன்னிசையில் இறைவனைப் பரவும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஈறுகச் சொல்லப்பட்ட திருத்தொண்டத் தொகையில் உள்ள இறையடியார்களை அதன்வழி நூலாகிய திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறப்பட்டுள்ள முறைப்படியே விளங்க விரித்துக் கூறக்கேட்ட இறையன்பன்றிப் பிறிதொன்றறியாக் குலோத்துங்கனும் அடியவரது மாருத அன்பின் திறத்தையும் அவ்வன்பின் பாற்பட்டு அடியவர் செய்த செயற்கருஞ் செயலையும் அதற்கு எளிவந்த இறைவனது பெருங்கருணைத் திறத்தையும் நினைந்து மனங்கனிந்து உருகிப் பின்னர் அவ்வடியவர்பெற்ற சிவப்பெருஞ் செல்வத்தை அனைவரும் பெறுவான் கருதி குன்றைநகர்க் குலபதியாகிய சேக்கிழாரை நோக்கித் திருத்தொண்டர்கள் இருந்த நாடு, ஊர், அவதரித்த மரபு, பெயர், அவர்தம் தொண்டின்திறம், காலம் முதலியவற்றையும் சிவ ஈடிப் பேறுகிய முத்தி பெற்றோர், சீவன் முத்தராய் உலகிடை இருப்போர் இனிப் பிறக்கும் அடியார், அடியாரைச் சார்ந்தோ பகைத்தோ முத்திபெற்றவர் பகைத்து நரகமெய்தியவர் இல்லறம், துறவறம், பிரமசரியம் என்ற நிலைகளிலிருந்து திருவருள் பெற்றோர், குரு, லிங்க சங்கமங்கள் வாயிலாகப் பாமுத்தியடைந்தவர் முதலியவர்களையும் யாவரும் தெளிவாக அறியும்வண்ணம் ஓர் காவியமாகச்செய்து தந்தருள்வேண்டுமென்று கேட்டுக் கொண்டனன்.

அத்துடன் நில்லாது அடியவர் காப்பியம்செய்தற்கு இடையூறு நேராவண்ணம் அமைச்சுத் தொழிலினின்றும் அவர்க்கு நீக்கமும் கொடுத்து அவர் விரும்பிய அளவு பொன்மணிக் குவியலும் கொடுத்தனன்.

## தில்லை செல்லல்

அதனைப்பெற்ற சேக்கிழார் தில்லை வீடுபேற்றிற்குரிய ஞானப் பேரிடம் ஆதலானும் தாம் இயற்றக்கருதிய திருத்தொண்டர் புராணத்திற்கு ஏற்புடைக்கடவுள் தில்லையம்பலத்துக் கூத்தன் என்று கருதினர் ஆகையாலும் முதனூலாகிய திருத்தொண்டத் தொகையின் முதலடி "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" எனத்தில்லையைக் குறிக்கின்றமையாலும் தாம் நூலியற்றத் தகுதியுள்ள தலம் தில்லையென எண்ணி ஆண்டுச் சென்றனர்.

தில்லையின் எல்லையில் சென்று கலந்து மனத்தான் வணங்கிப் பொற்றாமரைத் தடாகத்தில் புனலாடி எழுந்து விரைந்துசெ[illegible]ற

சிரமேற் கரம் குவித்து, மனம் நைந்துருகி அளவிடப்படாத பேரொளி வடிவாய இன்ப வெள்ளத்துள் திளைத்து முழுகி முப்புரம் எரித்து முன்னொரு மூவரைத் தப்பிய பொறுத்துத் தன்கீழ் ஏவல ராக்கிய காவல? ஏமுறும் அடியேன் நின் தொண்டர்சீர் பரவுவான் துணிந்து ஓர் கருத்துக்கொண்டனன். உளத்துக் குறைவற முடிந் திட அடியெடுத்தென்றன் அலமரல் போக்குதி. என்று இரந்தார்.

கங்கையும் அரவும் ஆட மன்றினில் நடனம் ஆடும் கண்ணுதல் அருளால் வான் வழியாக "உலகெலாம்" எனும் இறையருள்நாத ஒலியானது தோன்றி அடியவர் எல்லாரது செவிப்புலத்தினும் சென்று சேர்ந்தது.

அவ்வொலி செவிப்பட்ட உடன் தில்லை மூவாயிரவரும் ஏனைய மடங்களின் தலைவர்களும் ஏனைய அடியார்களும் சென்னிமேற் கூப்பிய கையராய்க் கூத்தப்பெருமானைத் தொழுதனர். கூத்தப் பெருமானுக்குச் சாத்தப்பட்ட திருமாலையையும் திருநீற்றையும் திருப்பரிவட்டத்தையும் இவர் தரிக்கத்தக்கவர் எனக்கருதிச் சைவ வேதியர் செந்தமிழ் பாடும் சேக்கிழார்க்களித்தனர் அவற்றைப் பெற்று இறையருள் கைவரப்பெற்ற குன்றைவேந்தர், தாம் செய்ய எண்ணிய திருத்தொண்டர் வரலாற்றுக்காதாரம் மூவர் சொன்ன செந்தமிழ்ப் பாமாலையாதலின் திருநெறித்தலைவர் மூவரையும் வணங்கித் திருநீறும் திருக்கண்டிகையுமான சிவ சின்னங்களைத் தரித்து ஆயிரக்கால் மண்டபத்து வீற்றிருந்து சிவபெருமான் அடி யெடுத்துக்கொடுத்த "உலகெலாம்" என்னும் செந்தமிழ்ச் சொற் றொடரையே முதலாகக்கொண்டு திருவிருத்தம்பாடிப் பெரிய புரா ணம் தொடங்கினர்.

## பெரியபுராண அடைவு

சேக்கிழார் தோன்றிய குலச்சார்பானும் அறிவானிறைந்த கல் விப் பெருமையானும், இளமையில் சைவ சமயத்தின் உண்மைக் கொள்கை இன்னதென்பதை ஆய்ந்துணர்ந்து இறைவனதடியில் ஆரா்வியற்கையவாக்கொண்டிருந்தவராதலின் அந்நிலையில் மூவர் நூல்களினும் திருத்தொண்டத் தொகையினும் திருத்தொண்டர் திருவந்தாதியினும் பிறநூல்களினும் தாம் பயிலுங்காற் கண்ட நாயன்மார் வரலாறுகளையும் அரசர்க்கு அமைச்சுத் தொழில் பூண்டவராதலின் அரசியல் அலுவல்பற்றித் தமிழ்நாட்டில் சுற்றுச் செலவு செய்யுங்கால் ஆண்டுள்ள நாயன் மாரோடு தொடர்புடைய அவர்களது திருவுருவங்களையுடைய சிவப்பெருங்கோயில்கட்குச்

சென்று ஆண்டுத் தாம்பெற்ற சான்றுகளையும் ஒன்றுகூட்டிக் கற்பனை என்பது சிறிதும் கலவா நிலையில் காவியம் ஒன்றை இயற்றினார். அக்காப்பியம் இயன்ற முறையைப்பற்றிச் சில குறிப்புக்கள் இவண் தருவாம்.

## நாயன்மார் குலமுறை

### அந்தணர்

1. தில்லைவாழ் அந்தணர்
2. குங்கிலியக்கலயர்
3. முருக நாயனர்
4. உருத்திர பசுபதியார்
5. சிறப்புலி நாயனர்
6. கணநாதர்
7. பூசலார் நாயனர்
8. சண்டேசர்
9. சோமாசிமாறனர்
10. நமிநந்தியடிகள்
11. திருஞானசம்பந்தர்
12. அப்பூதியடிகள்
13. திருநீலநக்கர்

### வேளாளர்

1. மூர்க்க நாயனர்
2. செருத்துணை நாயனர்
3. வாயிலார்
4. கோட்புலியார்
5. அரிவாட்டாய நாயனர்
6. இளையான்குடிமாறர்
7. திருநாவுக்கரசர்
8. சாக்கிய நாயனர்
9. மானக்கஞ்சாரர்
10. விறன்மிண்டர்
11. முனையடுவார்
12. ஏயர்கோன் கலிக்காமர்
13. சத்தி நாயனர்

### சிவ வேதியர்

1. புகழ்த்துணை நாயனர்
2. முப்போதும் திருமேனி தீண்டுவார்

### மாமாத்திரர்

1. சிறுத்தொண்டர்

### முடிமன்னர்

1. கோச்செங்கட் சோழர்
2. புகழ்ச்சோழர்
3. மங்கையர்க்கரசியார்
4. இடங்கழியார்
5. நெடுமாற நாயனர்
6. சேரமான்பெருமாள் நாயனர்

### ஆயர்

1. திருமூல நாயனர்
2. ஆனய நாயனர்

### குயவர்

1. திருநீலகண்டனர்

### பாணர்

1. திருநீலகண்டயாழ்ப் பாணர்

### பரதவர்

1. அதிபத்தர்

### வேடர்

1. கண்ணப்பர்

### சான்றோர்

1. ஏனதிநாதர்

### சாலியர்

1. நேச நாயனர்

### குறுநிலமன்னர்

1. நரசிங்கமுனையார்
2. கூற்றுவ நாயனர்
3. கழற்சிங்க நாயனர்
4. மெய்ப்பொருள் நாயனர்
5. ஐயடிகள் காடவர்கோன்

### வணிகர்

1. காரைக்காலம்மையார்
2. மூர்த்தி நாயனார்
3. கலிக்கம்ப நாயனார்
4. அமர்நீதி நாயனார்
5. இயற்பகை நாயனார்

### திருக்குலத்தார்

1. திருநாளைப்போவார்

### ஏகாலியர்

1. திருக்குறிப்புத்தொண்டர்

### தயில வினையாளர்

1. கலிய நாயனார்

### மரபறியப்படாதவர்

1. குலச்சிறை நாயனார்
2. தண்டியடிகள்
3. கணம் புல்லர்
4. எறிபத்தர்
5. காரி நாயனார்
6. பெருமிழலைக்குறும்பர் (இவர் தனியடியார்)
7. பத்தராய்ப் பணிவார்
8. பரமனையே பாடுவார்
9. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்
10. திருவாரூர்ப் பிறந்தார்
11. பொய்யடிமை இல்லாதவர்
12. முழுநீறு பூசிய முனிவர்
13. அப்பாலும்அடிச்சார்ந்தார் (இவர்கள் தொகையடியார்)

### குரு

1. திருஞான சம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. திருமூலர்
4. நெடுமாறர்
5. மங்கையர்க்கரசியார்
6. குலச்சிறையார்
7. திருநீலகண்டயாழ்ப் பாணர்
8. பெருமிழலைக்குறும்பர்
9. கணநாதர்
10. அப்பூதியடிகள்
11. சோமாசிமாறர்

குறிப்பு:— "அப்பாலும் அடிச்சார்ந்தார்" என்பவருள் முக்காலத்து அரனடியார்களும் எந்நாட்டிலும் உள்ள அரன் அடியார்களும் அடங்குவர்.

### இலிங்கம்

1. எறிபத்த நாயனார்
2. குங்கிலியக்கலயர்
3. முருக நாயனார்
4. கண்ணப்பர்
5. ஆனய நாயனார்
6. அரிவாட்டாயர்
7. மூர்த்தி நாயனார்
8. சண்டேசுரர்
9. திருநாளைப்போவார்
10. சேரமான் பெருமாள்
11. சாக்கியர்
12. கூற்றுவனார்
13. தண்டியடிகள் நாயனார்
14. சிறப்புலியார்
15. உருத்திரபசுபதியார்
16. கலிக்காமர்
17. கலியர்
18. காரி நாயனார்
19. அதிபத்தர்
20. நீலநக்கர்
21. பூசலார்
22. கணம்புல்லர்
23. கோட்புலியார்
24. நமிநந்தியடிகள்
25. கழற்சிங்கர்
26. வாயிலார்
27. செருத்துணையார்
28. புகழ்த்துணையார்
29. ஐயடிகள் காடவர்கோன்
30. கோச்செங்கட்சோழர்

### சங்கமம்

1. திருநீலகண்டர்
2. இயற்பகையார்
3. மூர்த்திநாயனர்
4. சிறுத்தொண்டர்
5. திருக்குறிப்புத்தொண்டர்
6. விறன்மிண்டர்
7. இடங்கழியார்
8. முனையடுவார்
9. சத்தி நாயனர்
10. அமர்நீதி நாயனர்
11. மெய்ப்பொருள் நாயனர்
12. ஏனாதிநாத நாயனர்
13. புகழ்ச்சோழர்
14. மானக்கஞ்சாரர்
15. இளையான்குடிமாறர்
16. காரைக்காலம்மையார்
17. நரசிங்கர்
18. கலிக்கம்பர்
19. நேச நாயனர்

(சடையனர் இதனுள் அடங்குவர்)

சடையனர், இசைஞானியார், சுந்தரர் என்னும் மூவரை இவருடன் சேர்க்க அறுபத்து மூவர் ஆதல் காண்க.

## அடியார் கல்வி நிலை

### இயல்

1. ஐயடிகள் காடவர்கோன்
2. திருமூலர்
3. காரி நாயனர்
4. சேரமான் பெருமாள் நாயனர்
5. பொய்யடிமை இல்லாத புலவர்

### இசை

1. திருநாளைப்போவார்
2. ஆனயர்
3. திருநீலகண்ட யாழ்ப்பாணர்
4. பரமனையே பாடுவார்

### இயலும் இசையும்

1. ஆளுடையபிள்ளை
2. ஆளுடைய அடிகள்
3. ஆளுடைய நம்பி
4. காரைக்காலம்மையார்

ஏனைய நாயன்மார் தவம் செய்து வீடு பெற்றவர்கள்.

## அடியார் நிலை

| பிரமசரியம் | இல்லறம் | துறவறம் |
| --- | --- | --- |
| 1. சண்டேசர் | 1. திருநீலகண்டர் | 1. மூர்த்தி நாயனர் |
| 2. சம்பந்தர் | 2. இயற்பகையார் | 2. அப்பர் |
| முதலியோர் | 3. சுந்தரர் | முதலியோர் |
| | முதலியோர் | |

சிவனடியாருடன் சேர்ந்து முத்தி பெற்றவர்கள் :—திருஞான சம்பந்தரது திருநல்லூர்ப் பெருமணத்தில் உடன் சென்றவர்கள்; சுந்தரருடன் சேரமான் பெருமாள் குதிரையேறிக் கயிலை செல்ல அவர்களுடன் சென்ற மக்கள்.

சிவனடியாருடன் பகையாய் முத்தியடைந்தவர்கள் :—சேய்ஞலூர்ச் சண்டேசர் இறைவனுக்கு ஆன்பால் சொரிந்த காலத்து அதைத்தடுத்து அவரால் தாள் தடியப்பட்ட அவரது தந்தையாகிய எச்சதத்தன், கோட்புலியாரால் மடிந்த அவரது உறவினர்கள் ஆகியோர் ஆவர்.

சிவனடியாருடன் பகையாய் நரகடைந்தவர்கள் :—மெய்ப்பொருள் நாயனுர்க்கு வஞ்சனையால் ஊறுசெய்த முத்திநாதன் என்பவனும், மூர்த்தி நாயனுர்க்கு இடுக்கண் விளைத்த அமணரும் ஆவர்.

இங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட நாயன்மாருடைய ஊர், மரபு, பெயர், தொண்டு, வீடெய்திய வகை முதலியவற்றைத் திருவருளானும், ஆராய்ச்சியானும் தெளிந்து நன்குணர்த்துதல் திறம்பட்ட நூலறிவும் உலகியலறிவும் நிறைந்த சேக்கிழார் பெருமானுக்கு இயல்வதே யன்றி நம்போன்முர்க்கு இயல்வதன்று.

"கருங்கடலைக் கைநீத்துக் கொளலெளிது: முந்நீர்க்
கடற்கரையின் நொய்மணலை எண்ணியள விடலாம்;
பெருங்கடல்மேல் வருந்திரையை யொன்றிரண்டென்றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிடலாகும்;
தருங்கடலின் மீனையளவிடலாகும்; வானத்
தாரகையை யளவிடலாம் சங்கரன்தாள் தமது
சிரங் கொள் **திருத்தொண்டர் புராணத்தை யளவிடநம்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே"**

என்முர் சேக்கிழார் புராண ஆசிரியரும்.

ஆரூரடிகள் (சுந்தரர்) செய்த திருத்தொண்டத் தொகைப் பதிகத்தின் முறையில், நம்பியாண்டார் நம்பிகள் செய்த திருவந்தாதியைக் கடைப்பிடித்து காண்டம் இரண்டாக வகுத்து, பதின்மூன்று சருக்கங்களாகப் பகுத்து நான்காயிரத் திருநூற்றைம்பத்து மூன்று திருவிருத்தங்கள் (4253) பாடி, "**திருத்தொண்டர் புராணம்**" என்னும் திருப்பெயரினை அமைத்து, மைக்காப்புச் சாத்தி அழகிய பெட்டி யொன்றினை அமைத்து அதில் புராணத்தை வைத்தனர்.

## அடியர்தம் புராணம் அரங்கறிவுறுதல்

குன்றை நகர் வேந்தர் தொண்டர் புராணம் பாடி முடித்தற்காகத் தில்லை சென்றபின்னர் அநபாயச் சோழன் தூதரை அவர்பால் அனுப்பி, அமைச்சர் தொண்டர் புராணம் செய்யும்போது உடன் துணையாக அருகிருந்தவர்கள் யாவர்? எதுவரையில் தொண்டர் புராணம் பாடப்பட்டுள்ளது? இனிப் பாடவேண்டிய பகுதி எவ்வளவுள்ளது? அதை அறிந்து வருக என்று கூறினன். அவர்கள் வருவதற்குள்ளேயே தனக்கிருந்த ஆர்வ மிகுதியால் அவரறியாமல் இன்னும் சில தூதரையும், அவரறியாமல் இன்னும் சில ஒற்றரையும் அனுப்பினன்.

இன்னணம் சென்ற தூதுவருட் சிவர் இதுவரையில் பாதிவரை புராணம் சென்றுள்ளது என்று சொன்னார்கள். சிலர் இன்று நாளைக்குள் புராணம் முடியும் என்று ஓடிக் கூறினர். அதன்பின் சிலர் புராணம் முடிந்துவிட்டது என்று கூறினர். இவ்வாறு வந்து சொன்ன தூதுவர் அனைவருக்கும் நவமணிகளும், முத்துக்குவியலும், பொன்னும், ஆடையும், ஏனைய பொருள்களும் மனமுவந்து வாரி வழங்கினன் வளவன்.

தில்லை சென்று அம்பலவாணர் நடத்தையும், அவர்தம் அடியவர் திறத்தையும், அடியவர் திறம் பகரும் அண்ணலார் திறத்தையும், எம்பெருமான் அடியெடுக்கப் பாடி முடித்த தொண்டர் புராணத்தையும் கண்டு கண் களிப்பேன் என்று காவலன் எழுந்தனன்.

சேக்கிழார் இயற்றிய புராணத்தையும், அவரையும் தொழும் பொருட்டுத் தெருக்கள்தோறும் பரிசனங்கட்குப் பறையறைந்து தெரிவித்து வளவன் யானைமேற் சிதம்பரத்திற்கு அறிஞராற் குறையற வறிந்த நன்னாளிலே புறப்பட்டுச் சென்றான். அவனுடன் அறிவினிற்றேர்ந்த புலவர்களும், அரசியல் அலுவலர்களும், போர்த்தொழிலிற்றிறம்பெற்ற தலைவர்களும், உள்ளூர்த் தலைவர்களும் சென்றனர். நால்வகைப் படைகளும் உடன் சென்றன.

அபய குலசேகரன் அடியரைத் தரிசிக்கவும், அடியர் புராணம் கேட்கவும் தில்லை வருகிறான் என்பதை ஒல்லையிற் கேட்ட தில்லைவாழ் அந்தணர்களும், ஆங்குள்ள மடங்களின் தலைவர்களும், பெண்களும், அறிவால் நிறைந்த பெரியோர்களும், எல்லையிலாத சொற்கொண்டு இறைபுராணம் பகர்ந்த வேளாண் குலதிலகராய சேக்கிழார் தாமும் ஊரினைப் பொலிவுசெய்து உள்ளங்களித்தவராய் அநபாயச் சோழனை இன்முகம் உடையவராய் வரவேற்று இன்னுரை கூறி நன்காசி செப்பினர்.

திருநீறும் கண்டிகையும் பூண்டவராய், அஞ்செழுத்தோதும் அகநிலை யுடையராய் வந்தணைந்த அருண்மொழித்தேவர் தம் சிவ வேடப் பொலிவினைக்கண்ட அநபாயன் இவ்வேடம் அரனடியார் வேடமாகும். குறைவற நிறைந்த தவவேடமாகும் என்று மனதின் கண் நினைத்து மகிழ்ந்து உவகை அளவிறந்து பெருக, ஆனந்தக் கூத்தாடி அம்பலவாணரது திருவருட் பெருமையினையும், அவர் சேக்கிழாரை ஆட்கொண்ட திறத்தினையும் எண்ணி உருகி அருண் மொழித் தேவர்தம் திருவடிகள் வணங்கினன். வணங்கியபின்னர்த் தேவராதிபன் திருத்தொண்டராய சேக்கிழாரும், துறவறத்துட் சிறந்த மடாதிபதிகளும் தொடரவந்து, அரியும் அயனும்தேட மறைந்து நின்றபொருள் பொன்னம்பலத்து வெளிப்பட நின்ற நிலைகண்டு வணங்கினன்.

கண்கள் நீர் சொரியவும், கைகள் குவியவும், மெய்ம்மயிரரும்ப வும், விதிர்விதிர்ப்பெய்தி முன்விழுந்து, எழுந்து சோழன் துதிக்க சிவபிரானது திருவாக்கு

**"சேக்கிழான் நமது தொண்டர்சீர்பரவ**
**நாம் மகிழ்ந்து உலகம் என்றுநம்**
**வாக்கினுல் அடியெடுத் துரைத்திட**
**வரைந்துநூல் செய்து முடித்தனன்**
**காக்கும்வேல் வளவ !**
**நீயிதைக் கடிது கேள்"** என்று

வானிழல் வழியாக எழுந்தது. அத்திருவாக்கினுடனே திருச்சிற் றம்பலத்து நடிக்கும் சிருபெருமான் **திருப்பாதச் சிலம்பொலி யும்** உடன் எழுந்தது.

திருப்பாதச் சிலம்பொலிகேட்ட அரனடியாரனைவரும், சோழ னும் குதுகலித்து, உளம் மகிழ்ந்தனர். "திருத்தொண்டர்கள் இறைவனுக்குத் தொண்டுசெய்த பெருமையினைப் பிறைமதிக் கண்ணியன் அருளால் திருவருட் சேக்கிழார் விரித்துரைத்த கதை கேட்பதற்குத் திருமன்றில் நடமிடும் பெருமானது அடித்தொண்டர் அனைவரும் வருக" என்று ஏட்டில் எழுதி அநபாயன் ஒவ்வொரு திசைதோறும் ஆட்களை அனுப்பினன்.

சிவசிந்தையுடையராய்ச், சிவசாதனமாய திருநீறும் கண்டிகை யும் தரித்துள்ளாராய்ச், சிவத்தொண்டு செய்பவராய் உள்ள சிவ சமயத்து அடியார் பலரும், தில்லையில் வந்து திரண்டனர்.

திருத்தொண்டர் புராணத்தைப் படிப்பவர் சிலர், எடெழுது வோர் சிலர், பூசை செய்பவர் சிலர், அன்பு செய்பவர் சிலர், இறைவன் திருவருட் சேக்கிழார்க்கு அடியெடுத்துக் கொடுத்த பெருமையை உன்னி வியப்பவர் சிலர் இவ்வாறு தில்லையெங்கணும் தொண்டர்புராண முழக்கமே நிறைந்தது.

தில்லையம்பலவாணர் திருநடனஞ் செய்யும் திருமன்றத்தைக் கோமய சலத்தால் மெழுகிப் புனிதமாக்கி, எப்புறங்களிலும் வெண் சுதை பூசி, அதனிடையில் அறுகாற் பீடமொன்றை இட்டு, அதன் மேற் பசும்பட்டொன்றைப் பரப்பி, வெண்பட்டொன்றை அதன் மேல் மடித்திட்டு, மதுநிறைந்த புதுமலர்களைத்தூவி, தூபதீபம் கொடுத்து, திருச் சேக்கிழார் செய்த பன்னிரண்டாந் திருமுறையெனப்படும் பெரிய புராணத்தை அதன்மேல் வைத்து வணங்கிப் போற்றி "உலகம் வாழவும், ஆன்மாக்கள் இறையருள்பெற்றுய்ய வும், தாங்கள் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தை நீரேவிரித் துப் பொருள் அருளிச் செய்வீராக" என்று சோழர் பிரான் முத லாகிய அடியார்கள் அனைவரும் குன்றைவேந்தரை நன்றினி திறைஞ்சிக் கேட்டுக்கொண்டனர்.

திருநெறித் தமிழ் வல்லவர்களும், சிவாகமங்களில் வல்லவர் களும், பிறவிப் பிணிதீர்க்கும் ஞானநூற் பயிற்சிமிக்கவர்களும், மறைவல்லாரும், இலக்கண விலக்கியங் கற்றுப் புலமை நிரம்பியவர் களும், பற்பல காவியங்கள் சொல்ல வல்லவர்களும் குன்றை முனி வர் தாம் செய்த சைவப் பெருங் கதையினை விரித்துரைப்ப இனிது விரும்பிக் கேட்டனர்.

சேக்கிழார் பெருமான் கூத்தப்பெருமான் திருநடம் புரியும் சிறந்த நாளும், ஆளுடைய பிள்ளையார் எனப்படும் திருஞான சம்பந் தர் பிறந்த நாளும், அவ்வாளுடைய பிள்ளையார் அழுது ஞானப்பால் அமுதுசெய்த நாளும், ஆகிய திருவாதிரை நாளிலே சித்திரைத் திங்களிலே தொடங்கி, அடுத்த சித்திரைத் திருவாதிரையில் முடிப்ப தாகப் புராணம் நடத்த அம்பலவர் அடியார் எல்லாம் நாடோறும் கேட்டனர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் மூவர் முதலிகள் அருளிய தேவாரம், திருமூலர் திருமந் திரம், காரைக்காலம்மையார் செய்த இரட்டைமணிமாலை, அந்தாதி, மூத்தபதிகம், சேரமான்பெருமாள் நாயனார் செய்த பொன் வண் ணத் தந்தாதி, திரு மும்மணிக்கோவை, ஆதியுலா, ஐயடிகள் வெண்பா எனும் இவை உறுப்பாகத் திரு நம்பியாண்டார் நம்பிகள் அருளிட திருவிருத்தம் உடலாக இவற்றின் பொருளே உயிராக நாலடியால் '**உலகெலாம்**' என்று தொடங்கிய தொண்டர் புராணம் நடந்தது.

திருத்தொண்டர்புராணம் நடக்குங்கால் நாடோறும் கேட்பதற்கு வந்து தில்லையிற் குவியும் தாண்டவன் தொண்டர்கள் தங்குதற்குரிய திருமடங்கள், திருமடங்கள்தோறும் திருவிளக்கு, தொண்டர்கள் அணிதற்குரிய உடை, மேற்போர்வை, உண்ணுதற்குச் செந்நெற்சோறு, கரும்பு, நறும்பழங்கள், தூயவறுசுவைக்கறி, நெய், தயிர், பால், தேன், பலகாரம், தண்ணீர், வெற்றிலை முதலியவற்றை அபயகுலசேகரன் ஏவலினல் அமைச்சர் நாடோறும் உதவினர்.

தில்லைமன்றில் நடமிடும் நடராசப்பெருமானுக்கு அன்றுமுதல் பூசை முதலியனவும் நடத்தி, அளவில்லாத புகழினையுடைய தில்லைவாழ் அந்தணர்களுக்கும் வெவ்வேறு அமுதுபடி, கறியமுது முதலானவெல்லாம் செங்கோற் சிறப்பெய்திய வளவர்பிரான் நாடோறும் அளித்தலின் எம்பிரான் தொண்டர் எங்கணும் நிறைந்து பூலோக சிவலோக மெனத் திருத்தில்லை பொலிந்தது.

திருமுறைகள் ஒன்று சேர்ப்பார், எழுதுவார், வாசிப்பார், பொருளுரைப்பார், கேட்பார், மகிழ்ந்து தலையசைத்துச் சேக்கிழார் செய்த பெருந்தவத்தினை வியப்பார், பெரியபுராணம் கேட்ட சோழர் பிரான் செவிக்கு இனிச் சிந்தாமணி பிடிக்குமோ? என்று உரைப்பார் இந்நிலையில் ஆயினர் தில்லை மக்கள்.

இத்தகைய சிறப்புடன் திருத்தொண்டர் புராணம் அரங்கேறி அடுத்த ஆண்டு சித்திரைத் திங்கள் ஆதிரை நாளில் முடிந்தது. திருத்தொண்டர்களின் 'அர, அர' என்னும் பேரொலி எங்கும் பரந்தது.

## நகர் வலம் வருதல்

தில்லைவாழ் அந்தணர்கள் திருத்தொண்டர் புராணம் எழுதிய திருவேட்டினைச் சிவமூல மந்திரத்தால் அருச்சனை செய்து, இதுவும் ஒரு ஐந்தாவது தமிழ்வேதம் என்றுரைத்து, அடைக்காய் அமுது, தூபம், தீபம், கவரி, குடை, கண்ணடி, ஆலத்தி, திருநீறு முதலியனவும் கொடுத்துப் பரவினர். சோழர்பிரான் திருமுறையைப் பசும் பட்டினற் சுற்றி, பொற்பேழையுள் இருத்தி, யானைமேல் ஏற்றிப் பின்னர் குன்றை நகர்க் குலபதியாய தமிழ்வளம் படுத்திய தன்மை சேர் திருச் சேக்கிழாரை யானைமேல் ஏற்றித் தானும் யானைமேல் ஏறி **அருண்மொழித்தேவர் பின்பிருந்து தன் துணைக்கரத்தால் கவரி வீசினன்.** வேதம் முழங்கவும், விண்ணவர் பூமழை பொழியவும், திருவீதி வலமாக வருங்காலத்து எம்பிரான் திருவருள் அறிந்து அரசர் கோமான் 'இதுவன்றே நான் செய்த தவப்பயன்' என்று கூறினன்.

திருச் சேக்கிழாரும், அவர்தம் திருத்தொண்டர் புராணமும் அரசர் அபய குலசேகரரும் யானைமேல் வரக்கண்ட மக்கள் நகரை அழகுபடுத்தினர். இராமாயணம் உரை செய்த வான்மீகியும், பாரதம் பாடிய வியாசனும், ஆயிர நாவுடைய அறிவினிற் சிறந்த ஆதிசேடனும், பொதியமலைத் தமிழ்முனிவராய அகத்தியரும் அருண்மொழித் தேவர்க்கு ஒப்பல்ல என்று புகழ்ந்தனர்.

கலைமகள் வெண்டாமரைப்பூவையும், சங்கப்புலவோர் சொல்லையும், பிரமன் நாக்கையும், குறுமுனியாய தமிழ்க் கோவையும் மறந்து, சேவையர் காவலராய சேக்கிழார் நாவிற் குடிகொண்டனள் என்று பரவினர்.

மக்கள் மகிழவும் மறுமையின்படையவும் திருவீதி வலம்வந்த பின்னர்த் திருமுறையை அரசனும் சேக்கிழாரும் தில்லைவாழ் அந்தணருடன் வந்து அம்பலவாணர் எதிர்வைத்தனர். அனைவரும் விழுந்து வணங்கி எழுந்து, சேவையர் காவலராய் உலகமக்கள் அனைவரும் உய்தற்கு நெறிகோலிய திரு. சேக்கிழார் பெருமானுக்குத் "**தொண்டர் சீர்பரவுவார்**" எனப் பெயர் சாத்தினர்.

அரசன் அபயகுல சேகரன் அம்பலனுர் அடியாராய சேக்கிழார்க்கு ஞானமுடி சூட்டி முன்மண்டபத்தில் இருத்தி வணங்கினன்.

திருஞானசம்பந்தர் ஓதிய தேவாரப் பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகும். திருநாவுக்கரசர் ஓதிய தேவாரப் பதிகங்கள் நான்கு முதல் ஆறு வரையுள்ள திருமுறைகளாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஓதிய தேவாரப் பதிகங்கள் ஏழாந் திருமுறையாகும். திருவாதவூரர் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறை, திருமூலர் திருமந்திரம் பத்தாந் திருமுறை, காரைக்காலம்மையார், பட்டினத்தடிகள், கழறிற்றறிவார் முதலியோர் அருளிய பாடல்கள் பதினொராந் திருமுறை, **சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாந்** திருமுறையென வகுத்து, செப்பேடு செய்து நடராசர் சந்நிதியில் ஏற்றுவித்தனர்.

இது பாலியாற்றினுற் சூழப்பட்ட தொண்டை நாடு செய்த பெருந்தவம், குன்றை நகர் செய்த பெருந்தவம், வேளாண்குல திலகராய சேக்கிழார் பெருமான் செய்த பெருந்தவம் என்று அனைவரும் துதித்தனர்.

## பாலறாவாயர் அமைச்சர் பதவி பெறுதல்

இந்நிலை நகரெல்லாம் இன்பத்தில் ஆழ்ந்து இருக்கும்பொழுது அநபாயன் திருவருட் பேறுபெற்ற சேக்கிழார் தம்பியாகிய பாலறாவாயர் எங்குற்றனர்? என அருகிருந்தவரை வினவினன். அவர்கள் பாலறாவாயர் குன்றை நகரில் தம்பெயர் விளங்க ஒரு குளம் அமைத்து, சேக்கிழார் பெருமானால் இயற்றப்பட்ட திருநாகேஸ்வரத்தில் வேண்டிய திருப்பணிகளும் இயற்றிக்கொண்டு அங்குள்ளனர் எனக் கூறினர். கூறியவுடன் வளவர்கோன் பாலறாவாயரை ஆண்டுத் தருவித்து அவர்க்கு அமைச்சர் பதவிதந்து, "**தொண்டைமான்**" என்று பட்டமும் கொடுத்து, தனது மண்டலத் தலைமையும் கொடுத்தனன். பாலறாவாயரும் தொண்டைமண்டலத்தை அறநெறிவழியில் முறைநனிபுரிந்து, ஆட்சிசெய்து "தொண்டைமண்டலம் நின்றுகாத்தபெருமான்" எனத் தம்பெயரை நிலை நிறுத்தினர்.

## சேக்கிழார் இறைவன் திருவடிப்பேறு எய்தல்

தொண்டர்சீர் பரவு சேக்கிழார் பெருமான் தில்லை நகரினில் அறுபத்துமூவர் கதைதனை உணர்ந்து, அம்பலவாணர் அடியார் தம்முடன் அருந்தவம் புரிந்து, பின் கொன்றைச் சடையான் திருவடிக்கீழ் இடையறாத பேரன்புடையராய் ஓர் **வைகாசித்திங்கள் பூசவிண்மீன்** கூடிய நன்னாளில் அம்பலத்தரசர் அடிநிழல் அடைந்தனர்.

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணரே முதலா யுள்ள
திருத்தொண்டத் தொகை பரவு மடியார் வாழ்க
வல்லவர் சீரெடுத்து வாக்காற் சொன்ன
வள்ளலருண் மொழித்தேவர் வாழ்க! வாழ்க!!
நல்லபெருஞ் சைவநெறி வாழ்க மேலும்
நற்றமிழும் மறைகளுமே ஓங்கி மல்க
தில்லைநட மிடும் அரசர் கழல்கள் வாழ்க
திங்கள்முகச் சிவகாமி வாழ்க! வாழ்க!!

113071

**சேக்கிழார் வரலாறு முற்றிற்று**

திருச்சிற்றம்பலம்.

விழுப்புரம் - ஹநுமான் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

83
1-55

விழுப்புரம்
ஹனுமான் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
1—6—49.